A

# அறிவித்தல்

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சவாலுக்குட்படுத்தப்பட்ட “இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தம்)” எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

இச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல எனவும் வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம் நிறைவேற்றப்படலாம் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.